Prathimana Journal
Volume 14, No.2, 2021, 055 - 067

Department of Sociology
Faculty of Humanities and Social Sciences
University of Ruhuna

# தனிமைப்படுத்தல் வழியான சமூக அனுபவம்: கொவிட்-19 தொற்றுக்குள்ளான தாய் ஒருவரின் கதையாடல் பகுப்பாய்வு

**ச.சிறிகாந்தன்**

## ஆய்வுச் சுருக்கம்

*கதைகள் மக்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தவை. ஒரு நபர் தனது வாழ்க்கை அனுபவங்களின் பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைத்து தனது கதைசொல்லல் வழியாக பெரியதொரு சமூக பிம்பத்தை உருவாக்கின்றார். பண்புசார் பகுப்பாய்வில், கதைகள் பல்வேறு சமூக நிகழ்வுகள் மற்றும் கோலங்களை வெளிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளன. மக்கள் தாங்கள் யாரைச் சந்தித்தார்கள் என்பதையும், சில நேரம் தங்கள் வாழ்நாளில் மகிழ்ச்சியாகவோ அல்லது கவலையாகவோ இருந்த தருணங்களைத் தங்கள் கதைகளின் மூலம் விவரிக்கின்றனர். இவ்வாய்வு, கொவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட தாயொருவரின் சமூக அனுபவத்தை பகுப்பாய்வு செய்கின்றது. இந்த நூற்றாண்டில் உலகம் சந்தித்த மிகப்பெரிய தொற்றுநோயாக் கருதப்படும் கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டதன் மூலம் தகவலாளி பெற்றுக்கொண்ட அனுபவத்தினை தன்னுடைய கதையின் வழியாக விவரிக்கினறார். கொவிட்-19 பெருந்தொற்றுடன் இணைந்த வகையிலான பொதுச் சுகாதார நடைமுறைகள் மற்றும் தனிமைப்படுத்தல் செயன்முறைகள் தனியனுடைய நலிவுக்கான காரணமாகவும் சமூகப் புறமொதுக்கல், பொருளாதார நெருக்கடி, தனியனுக்குள்ளேயான மற்றும் தனியன்களுக்கிடையிலான முரண்பாடுகள் போன்ற எண்ணற்ற சமூக விளைவுகளின் மையமாகவும் கருதப்படுகின்றன. கொவிட்-19 தொற்றுக்குள்ளான தாயொருவரின் கதையின் வழியாக அவர் சந்தித்த சமூக, பொருளாதார மற்றும் உளவியல் பிரச்சினைகளை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. தனியனுடைய வாழ் வில் பல்வேறுபட்ட உளசமூக மற்றும் சமூகப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் தனிமைப்படுத்தல், குறிப்பாக கொவிட்-19 மூலம், பொதுமக்கள் மத்தியில் சமூக களங்கம் மற்றும் சமூக பொருளாதாரப் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தனியன்கள் பல்வேறுபட்ட சவால்களைச் சந்திக்க நேரிடுகின்றது. கொவிட்-19 காரணமாக ஏற்படும் சமூக களங்கம் மற்றும் சமூக-பொருளாதார பீதி ஆகியன தனியனுடைய நாளாந்த வாழ்வில் எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதனை இந்த கதையாடல் பகுப்பாய்வு ஆராய்கின்றது. கொவிட்-19 வழியான பாதிப்புக்கள் பன்முகத்தன்மை வாய்ந்தன என்பதனை இவ்வாய்வு வலிறுத்துகின்றது. இது சர்வதேச சமூகம், அந்தந்த நாட்டின் அரசுகள் மற்றும் அதனுடைய மக்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த பொறுப்புணர்வுகளை நாடுகின்றது. இந்த பெருந்தொற்றுக்கு எதிரான செயன்முறையில் அனைத்து தரப்பினரையும் ஒரு வட்டத்திற்குள் அணிதிரட்டுவதன் மூலம் கொவிட்-19 இல்லாத உலகம் என்பது நிதர்சனமாகும்.*

**கட்டுரை வரலாறு:**

திருத்தப்பட்ட : 15.11. 2022

ஏற்றுக்கொள்ளப்பட்டது : 21.06 .2022

**திறவுச் சொற்கள் :**
கதையாடல் பகுப்பாய்வு, கொவிட-19, சமூகக் களங்களம், சமூக-பொருளாதாரப் பீதி

## அறிமுகம்

கொவிட்-19 பெருந்தொற்று தாக்கத்திற்குப் பின்னரான ஆய்வுகள் பன்முகத் தன்மையுடனவாகக் காணப்படுகின்றன. கொவிட்-19 பெருந்தொற்று பற்றிய மருத்துவ விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை கொவிட்-19 பேரிடரின் வழியான சமூக விளைவுகள் தொடர்பான பல்துறைசார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டு கொவிட்-19 வைரஸ் தொற்றுக் கண்டறியப்பட்ட பின்னர் உலகளாவிய சமூக நிலவரங்கள் மாற்றமடைந்து வருகின்றன. இன்னொருவகையில் கூறினால் உலகில் புதிய சமூக-பண்பாட்டு நடைமுறைகள் கொவிட்-19 பேரிடரினை எதிர்கொள்ளக்கூடிய வகையிலான பண்பாட்டு தகவமைப்பாக உருவாக்கம் பெற்றுள்ளன. கொவிட்-19 பெருந்தொற்றிற்கு எதிரான சமூக வாழ்வு உலகப் பண்பாட்டுப் பொதுமையாகியுள்ளது. இந்நிலையில் கொவிட்-19 தொடர்பாக மருத்துவ விஞ்ஞானம் சார்ந்த ஆய்வுகளும் சமூக விஞ்ஞான ஆய்வுகளும் உலகளாவிய நிலையில் புதிய ஆய்வுப் பண்பாட்டை உருவாக்கியுள்ளது. இவ்வாய்வானது கொவிட்-19 பேரிடர் வழியான சமூக விளைவுகளை முதன்மைப்படுத்துகின்றது.

---

ச.சிறிகாந்தன் ✉ srikanthan80@gmail.com சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

© சமூகவியல் துறைஇ மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞான பீடம்இ ருஹுண பல்கலைக்கழகம்

உலக மக்கள் அனைவரும் கொவிட்-19 பெருந்தொற்று தாக்கத்தினால் பல்வேறுபட்ட சமூக-பொருளாதார-உளவியல் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். உலக நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது மக்கள் நலன் சார்ந்து புதிய அரசியல் கொள்கைகளையும், சட்ட வரன்முறைகளையும் புதிய சுகாதார வழிகாட்டிகள் உள்ளடக்கிய சுகாதார நடைமுறைகள் மற்றும் மருத்துவ சுகாதார ஏற்பாடுகளையும் உருவாக்கி வருகின்றது. பொதுமக்களைப் போன்று கொவிட்-19 பேரிடர்சார்ந்து அரசியல்-பொருளாதாரப் பிரச்சினைகளையும் உலக நாடுகள் ஒவ்வொன்றும் எதிர்கொண்டு வருகின்றன. இந்நிலையில் கொவிட்-19 பெருந்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தவும், கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த மருத்துவ கவனிப்புக்களை வழங்கவும் ஒவ்வொரு அரசும் மருத்துவ-சுகாதார விதிமுறைகளுக்கு அமைய தனிமைப்படுத்தல் நிலையங்களை (Quarantine Centre) உருவாக்கி பராமரித்து வருகின்றன. தனிமைப்படுதல் நிலையங்களும் அதுசாரந்த செயன்முறைகளும் மக்களிடையே வெவ்வேறுபட்ட சமூக-பொருளாதார-உளவியல் அனுபவங்களை ஏற்படுத்திவருகின்றன. இந்நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மீளத் திரும்பியவர்களின் சமூக அனுபவங்களின் வழியான அவர்களின் சமூக நிலவரங்களை பகுப்பாய்வு செய்வதினை இவ்வாய்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

மருத்துவ விஞ்ஞான ஆய்வு முடிவுகள் கொவிட்-19 வைரஸ் ஒருவருடைய வாழ்வினை இறப்பு நிலைக்கு கொண்டு செல்லக் கூடிய ஒரு கடுமையான நோய் என்று குறிப்பிடுகின்றன (Rehman, 2021). இது மனிதர்களுக்கிடையிலான நேரடி இடைவினைகளின் வழியாகப் பரவக்கூடிய ஒரு பேரிடர் மிக்க தொற்று நோயாகும். நோயிலிருந்து விடுபடல் என்பதும் தனிமனித உடல்-உள ஆரோக்கியங்களுடனும் தொடர்புபட்டது. ஆனால் கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மீளவும் சமூகத்துடன் ஒன்றிணைதல் (social integration) என்பது ஒரு மிகப்பெரிய சவாலான விடயமாகவே உள்ளது. இத் தொற்று நோய்பரவல் காரணமான பல்வேறு நடைமுறைகள் தனியன்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றமையினை அவதானிக்க கூடியதாக உள்ளது. இந்நிலையில் இவ்வாய்வானது கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மீளவும் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்ந்துவருகின்ற தாய் ஒருவர் அனுபவித்த சமூக பிரச்சினைகளை அவருடைய கதைசார் விவரிப்பின் அடிப்படையில் வெளிக்கொண்டு வருகின்றது.

## ஆய்வின் நோக்கம்

தனிமனிதனின் வேறுபட்ட அனுபவங்கள் யதார்த்த சமூக நிலவரத்தின் பிரதிபலிப்புக்களாக அமைகின்றன. சமூக அடையாளப்படுத்தல் என்பது தனியனுடைய சமூக நிலவரத்தின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற மிக முதன்மையான காரணி. சமூக விஞ்ஞானத் துறைகளில் சமூகக் களங்கம் மற்றும் பீதி என்பது தனியனுடைய சமூக இருப்பின் மீதான பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பொருண்மைகளாக பார்க்கப்படுகின்றன. இந்நிலையில் கொவிட்-19 பெருந்தொற்றின் பாதிப்பும் அதன் வழியாக ஏற்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தலும் பல்வேறுபட்ட சமூக அனுபவங்களின் அடிப்படையாகக் காணப்படுகின்றன. தற்போதைய கொவிட்-19 தொற்று மக்களிடையே ஏற்படுத்திய சமூகக் களங்கத்தினையும் (அகத்தடை) அதனோடிணைந்த பீதியையும் உருவாக்கி வேறுபட்ட சமூக-பொருளாதார- பண்பாட்டியல் அனுபவங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையாக தனியன் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் உருவாகின்ற சமூக-பொருளாதார மற்றும் உளவியல் பிரச்சினைகளை கதையாடல் பகுப்பாய்வின் வழியாக வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

## இலக்கிய மீளாய்வு

கொவிட்-19 பேரிடர் தொடர்பான ஆய்வு ஆர்வம் என்பது உலகப் பொதுமையானது. விஞ்ஞானத் துறைசார்ந்த ஆய்வுகளுக்குப் புறம்பாக சமூக விஞ்ஞான துறைசார்ந்த ஆய்வுகள் உலகளாவிய நிலையில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இலங்கையினைப் பொறுத்த வரையில் மருத்துவ விஞ்ஞான ஆய்வுகளுக்குப் புறம்பாக கொவிட்-19 பேரிடர் தொடர்பான சமூக விஞ்ஞான ஆய்வுகள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் குறிப்பாக தனிமைப்படுத்தல் நிலையங்கள் தொடர்பாகவும், அங்கு இடம்பெறும் மருத்துவக் கவனிப்பு முறைதொடர்பாகவும் குறிப்படத்தக்க ஆய்வுகள் உலகளாவிய நிலையிலும் இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பௌடேல் மற்றும் பிறேமோற் (Poude & Pramod, 2020) ஆகியோரால் நேபாள தேசத்தில் மேற்கொள்ளப்பட்ட *சமூக பொருளாதார மற்றும் மனநல அம்சங்களில் கொவிட்-19 தொற்று நோயின் தாக்கம்* எனும் ஆய்வானது கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக நேபளத்தில் மேற்கொள்ளப்பட்ட நாடு முடக்கப்பட்ட ஊரடங்கு, சுய தனிமைப்படுத்தல்கள், சமூக இடைவெளிகள் பேணல் மற்றும் தனிமைப்படுதல் நிலையங்கள் போன்றன நேபாளிகளின் ஒட்டுமொத்த உடல், மன, ஆன்மீக மற்றும் சமூக நலவாழ்வினை பாதித்துள்ளமையினை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. இதேவேளை மார்ட்டின் மற்றும் அவருடைய குழுவினாரால் (Martin *et al.*, 2020) *குடும்ப நுகர்வு மற்றும் வறுமையில் கொவிட்-19 இன் சமூக பொருளாதாரக் தாக்கம்* எனும் ஆய்வும் இங்கு கவனிக்கத்தக்கது. அமெரிக்காவின் சான்பிரன்ஸிக்கோ பிராந்தியத்தில் பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இரண்டு பிரதான முடிவுகளை முன்வைத்துள்ளது. ஒன்று எந்தவித சமூக பாதுகாப்பும் இல்லாமல் மக்களுக்கு கொவிட்-19 பேரிடர் பாரிய பொருளாதார அதிர்ச்சியை ஏற்படுத்தும், மற்றையது கொவிட்-19 பெருந்தொற்று வழியாக ஏற்பட்ட குடும்ப நெருக்கடிகளின் வீச்சுகள் மற்றும் கால எல்லைகளை மத்திய மற்றும் மாநில அரசினுடைய நலன்சார் விடயங்கள் குறைக்கும் என குறிப்பிட்டுள்ளது.

ஜர்ப்ளம் மற்றும் ஏனையோர் (Jurblum *et al.* 2020) மேற்கொண்ட ஆய்வு கொவிட்-19 பெருந்தொற்று காரணத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சமூக ஒதுக்கம் (social isolation) மற்றும் தனிமைப்படுத்தல்கள் (quarantine) ஆகியவற்றினால் ஏற்படும் உளப் பாதிப்புக்களை ஆராய்கின்றது. அதாவது வீட்டிலே தங்கிருத்தல் மற்றும் பாதுகாப்பாக இருத்தல் என்பது வெவ்வேறுபட்ட உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்கின்றனர். இதேநேரம் மரோற்றா, அன்றீயா மற்றும் குவாசினி (Marotta, Andrea & Guazzini, 2020) ஆகியோர் இணைந்து மேற்கொண்ட *தனிமைப்படுத்தலுக்கு முன்னரும் பின்னரும்* எனும் ஆய்வில் இத்தாலியில் முழுமையான ஊரடங்கு காரணமாக மக்களிடம் ஏற்பட்ட உளவியல் பாதிப்புக்கள் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அரசினால் மேற்கொள்ளப்பட்ட சமூகக் கொள்கைகள் மக்களுக்கு நன்மைகளைத் தந்திருந்தாலும் உளப் பிரச்சினைகளை எதிர்கொள்ளப் போதாமையாக இருந்துள்ளமையினைச் சுட்டிக்காட்டுகின்றது.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளுக்குப் புறம்பாக புறுக்கு மற்றும் ஏனையோர் (Brooks *et al.*, 2020) மேற்கொண்ட ஆய்வானது தனிமைப்படுத்தல் சார்ந்த விடயங்களுடன் தொடர்புடைய உளவியல் பாதிப்புக்களை பல்வேறுட்ட விடயங்களை முதன்மைபடுத்தி வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையானது தனிமைப்படுத்தலின் விளைவான உளவியல் பாதிப்புக்கள் தொடர்பாக வெளிவந்த 3166 ஆய்வுக் கட்டுரைகளில் 24 கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் வெளிப்படுத்தப்பட்ட ஆய்வு முடிவுகளை மதிப்பீடு செய்து எழுதப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது தனிமைப்படுத்தல் மற்றும் தனிமைப்படுத்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் நிலவும் அழுத்தங்களுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களை முதன்மைபடுத்தியுள்ளது.

ஆபிரிக்க நாடான உகண்டாவில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட *கொவிட்–19 ஆனால் நிறுவனமயப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தலில் தனியன்களுடைய அனுபவங்கள்* (Ndejjo *et al.*, 2021) எனும் ஆய்வானது தனிமைப்படுத்தல் நிலையம் சார்ந்து தனியன்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களை பண்புசார் ஆய்வு முறையியலின் வழியாக வெளிப்படுத்துகின்றது. தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த, இருக்கின்றவர்களில் நோக்கம் கருதிய மாதிரி எடுப்பினைப் பயனபடுத்தி தெரிவுசெய்யப்பட்ட நபர்களிடம் தொலைபேசி உரையாடல் மூலம் பெறப்பட்ட ஆழமான நேர்காணல் வழி இவ்வாய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் நிலையத்தின் சுற்றுச் சூழல், தனிமைப்படுத்தல் நிர்வாக முகாமைத்துவம், ஒவ்வொரு தனியன்சார் காரணிகள் மற்றும் ஏனைய காரணிகளின் செல்வாக்குட்பட்டு அமையப்பெற்ற நேர்-எதிர் அனுபவங்களை தனியன்கள் ஒவ்வொருவரும் பெற்றுள்ளமையினை இவ்வாய்வு விரிவாகவே வெளிப்படுத்தியுள்ளது.

துருக்கி மற்றும் சீனா ஆகிய வேறுபட்ட இரண்டு நாடுகளில் நிலவும் தனிமைப்படுத்தல் நடைமுறைகளின் வழியாக குழந்தைகளின் பெற்றோர்களுடைய அனுபவங்களை ஒப்பியல் நோக்கில் ரோரன் மற்றும் அவருடைய சகாக்களுடைய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது (Toran *et al.*, 2021). இவ்வாய்வின் பிரதான குவிமையம் தனிமைப்படுத்தல் செயன்முறை மற்றும் அக்காலத்தில் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமான உறவுநிலையின் போக்கினையும் தரத்தினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. குறிப்பிடத்தக்க உளவியல் வெளிப்பாட்டு நிலமைகள் இவ்வாய்வின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக பெற்றோருக்கும் குழந்தைகளுக்கிடையிலான உளவியல்சார் அனுபங்களை முறைப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளமை கவனிக்கதக்கது. இவ்வாய்வு குடும்ப தனிமைப்படுத்தலினை மையப்படுத்தியுள்ளமையினால் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கமான தொடர்பு நேர்நிலையாக உள்ளமையினை குறிப்பிட்டுள்ள அதேவேளை இக்காலப்பகுதியில் பெற்றோர் எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்கள் குறித்தும் வெளிப்படுத்தியுள்ளது. குறிப்பாக வீட்டிலிருந்து அலுவலகப் பணியினைத் தொடரும் போது ஏற்படும் குடும்ப்பணி சார்ந்த சிக்கல்களை வெளிப்படுத்தியுள்ளது. இதனால் பெற்றோர்களிடையே கோபம், பதற்றம், சலிப்பு போன்ற உளவியல் அனுபவங்கள் வெளிப்படுவதுடன் இவை சிலசமயம் பிள்ளைகளின் மீது உடல் மற்றும் உள ரீதியான வன்முறைகளுக்கு இட்டுச் செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுடனான நேர்காணலை அடிப்படையாக் கொண்டு லோகினிவா மற்றும் ஏனையோரும் (Lohiniva *et al.*, 2021) *பின்லாந்தில் கொவிட்-19 உடன் தொடர்புபட்ட வகையில் களங்கம், தனிமைப்படுத்தல் மற்றும் தனித்துவிடல் அனுபவங்கள் தொடர்பான கற்றல்* எனும் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். பண்புசார் ஆய்வு அணுகுமுறையிலான இவ்வாய்வானது 64 குடும்பங்களின் அனுபவங்களின் அடிப்படையில் கொவிட்-19 பெருந்தொற்றின் சமூகவிளைவுகளில் ஒன்றான களங்கம் பற்றி ஆராய்ந்துள்ளது. சமூக உறவுகளை பாதித்தல் மற்றும் உளவியல் அழுத்தத்தினை உருவாக்குவதல் ஆகியவற்றின் வழியாக சவால்களை சமூக களங்கம் கொண்டுள்ளமையினை ஆய்வாளர்கள் ஆய்வு முடிவின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட பொதுச் சுகாதார நடைமுறைகளில் ஒன்றான சமூக இடைவெளி (social distance) மற்றும் தனிமைப்படுத்தல் என்பது தனியன்களுக்கிடையில் வேறுபட்ட சமூக அனுபவங்களையும் உளவியல்சார்ந்த விடயங்களையும் உருவாக்கியுள்ளமையினை குழுக்கலந்துரையால் வழியாக வில்லியம் மற்றும் ஏனையோர் (று்டைடயைஅள *நவ யட.இ* 2020) ஆராய்ந்துள்ளனர். இழத்தல் என்பது பொருளாதார விடயங்களுக்கு அப்பால் சமூக–

உளவியல் விடயங்களிலும் காணப்படுகின்றமையினை இவர்களுடைய ஆய்வு முடிவுகள் மிகத் தெளிவாக குறித்துரைத்துள்ளன.

இலங்கையினைப் பொறுத்தவரையில் காலிங்க ரியுடர் சில்வா (ளூடைஎயஇ 2020) *இலங்கையில் கொவிட்-19 பற்றிய களங்கம் மற்றும் ஒழுக்கம்சார் பீதி* எனும் ஆய்வில் இலங்கையில் விரிவடைந்து வருகின்ற கொவிட்-19 தொற்று நோயானது பயம் (யெநை) மற்றும் சமூகக் களங்கம் (ளழஉயைட ளவபைஅய) உள்ளிட்ட ஒரு இணையை உருவாக்கியுள்ளது என்பதனை தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். ஆய்வின் முடிவானது சமூகத்தினை ஜனநாயகமாக்குதல், மனித உரிமைகளை மற்றும் சமூக நீதியை ஊக்குவித்தல் ஆகிவற்றின் பொருட்டு பொருத்தமான சமூகக் கொள்கைகள், கல்வித்திட்டங்கள், இளைஞர்களைத் தயார்படுத்தல் போன்றவற்றினை முதன்மைப்படுத்துகின்றது.

2020 ஆகஸ்ட் மாதத்தில் றுகுணுப் பல்கலைக்கழகத்தின் மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடமானது இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றின் வழியான சமூக பொருளதாரப் பாதிப்பு தொடர்பான விரிவான ஆய்வொன்றினை மேற்கொண்டு இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது (Bohingamuwa, 2020). பண்புசார் ஆய்வு முறையியலை முதன்மைப்படுத்தியும் இணைய வழியாகப் பெறப்பட்ட வினாக்கொத்துகளின் அடிப்படையிலும் இலங்கையில் கொவிட்-19 பேரிடர் ஏற்படுத்திய சமூக-பொருளாதார தாக்கங்கள் தொடர்பாக இவ்வாய்வு பகுப்பாய்வு செய்துள்ளது.

சமூகவியல் ஆய்வாளார் ஒருவர் இலங்கையில் இராணுவத்தினாரால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் (institutional quarantine) நிலையத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட சமூக அனுபவங்களை *முகமூடிச் சமூகம்: தனிமைப்படுத்தலின் சுயசரிதை* எனும் தலைப்பில் வெளியீட்டுள்ளார் (முயாயனெயபயஅயபநஇ 2021). இக்குறிப்பிட்ட சுயசரிதையில் தனிமைப்படுத்தல் காலமான 14 நாட்களில் அவருக்கு ஏற்பட்ட தனிமைப்படுத்தல் செயன்முறை அனுபவத்தினை காட்சிசார் பிரதிபலிப்புக்களுடன் விவரிப்புச் செய்திருப்பதுடன் தனிமைப்படுத்தல் நிர்வாக அணுகுமுறைகளையும் விரிவாக விவரணம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் உலகளாவிய நிலையிலும் இலங்கையிலும் கொவிட்-19 பெருந்தொற்றுடன் தொடர்புடைய சமூக விடயங்களைப் பகுப்பாய்வுக் உட்படுத்தியுள்ளமை தெளிவாகப் புலப்படுகின்றது. எனினும் கொவிட்-19 பெருந்தொற்றின் தொடர்ச்சியின் வழியாக அமையப்பெறும் தனிமைப்படுத்தல் தொடர்பான சமூக-பொருளாதார மற்றும் உளவியல் சார்ந்த ஆய்வுகள் உலகளாவிய நிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் இலங்கையின் அதற்கான முயற்சிகள் மிகக் குறைவாக உள்ளமையினை கண்டறிய முடிகின்றது. இந்நிலையில் இவ்வாய்வானது கதையாடல் பகுப்பாய்வின் (narrative analysis) வழியாக தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளிவந்து சமூக வாழ்வில் மீளிணையும் தாய் ஒருவரின் கதையினை முதன்மைப்படுத்தி தனிமைப்படுத்தல் நிலையம் முதல் மீள் சமூக ஒன்றிணைப்பு வரையாக உள்ள காலப்பகுதியில் குடும்பங்கள் எதிர்நோக்கின்ற சமூக-பொருளாதார-உளவியல் விடயங்களைப் பகுப்பாய்வு செய்கின்றது.

## ஆய்வு முறையியலும் தரவுகளும்

சமகால சமூக விவகாரங்களில் ஒன்றாகக் காணப்படும் கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவுகளை எண்ணியல் அளவீடுகளுக்குப் புறம்பாக (quantitative measures) பண்பியல் அனுபவங்களின் (qualitative experiences) வழியாக வெளிப்படுத்தல் என்பது தற்காலத்தில் நிலவும் கொவிட்-19 பெருந்தொற்றுடன் தொடர்புடைய முதன்மையான விடயங்களை வெளிப்படுத்தவதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவான நடைமுறைகளின் சமூக அனுபவம் பொதுவாகக் காணப்பட்டாலும் கொவிட்-19 தொற்று ஏற்பட்டவர்களின் அனுபவம் தனித்துவமானது. இவை கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவரின் சமூக-பொருளாதார நிலமைகள் மற்றும் கல்வியறிவு, மருத்துவக் கிடைப்பனவு, அரசு மற்றும் ஏனைய சமூக ஆதரவுகளின் கிடைக்கப்பெறும் தன்மை போன்றவற்றுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இந்நிலையில் இவ்வாய்வானது கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனியனுடைய அனுபவத்தினை அவருடைய கதைசார் விவரிப்பின் அடிப்படையில் கதையாடல் பகுப்பாய்வின் வழியாக ஆராய்கின்றது.

கொவிட்-19 சமூக-பொருளாதார-உளவியல் விளைவுகள் தொடர்பாக குறிப்பிடத்தக்க ஆய்வுகள் (Ndejjo *et al.*, 2021; Toran *et al.*, 2021; Lohiniva *et al.*, 2021; Williams *et al.*, 2020; Kahandagamage, 2021) பண்புசார் ஆய்வு அணுமுறையில் உலகளாவிய நிலையிலும் இலங்கையிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் ஆய்வாளர்கள் தங்களுடைய சொந்த அனுபவத்தினை ஆய்வு முடிவுகளாக வெளிப்படுத்தியுள்ள (Kahandagamage, 2021) அதேவேளை தனிப்பட்ட நேர்காணல்கள் (Ndejjo *et al.*, 2021; Toran *et al.*, 2021; Lohiniva *et al.*, 2021) குழுக்கலந்துரையாடல்கள் (Williams *et al.*, 2020) போன்றவற்றின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கொவிட்-19 பேரிடரின் வழியான சமூக-உளப் பாதிப்புக்களை வெளிப்படுத்தியுள்ளனர். மேற்குறிப்பிட் ஆய்வு அணுகுமுறைகளினைக் கருத்தில்கொண்டு இவ்வாய்வானது கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தாய் ஒருவருடைய கதை விவரிப்பினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பார்பரா ஹார்டி மற்றும் மற்றவர்களும் குறிப்பிட்டது போல, கதைகள் சமூக வாழ்வில் ஒருங்கிணைந்தவை, மக்கள் தொடர்ந்து தங்களுக்கும் மற்றவர்களுக்கும் கதைகளைச் சொல்கின்றார்கள். மக்கள் ஒரு ஒத்திசைவான முழுமைக்காக அன்றைய துண்டுகளை சேகரிக்கிறார்கள் அல்லது ஒரு ஒத்திசைவான வாழ்க்கைக் கதையை உருவாக்க ஒரு வாழ்க்கையில் நிகழ்வுகளின் துண்டுகளை சேகரிக்கிறார்கள். பெரும்பாலான மக்கள் சுயசரிதைகளை எழுதமாட்டார்களால். ஆனால் கதைகளைக் கூறுகின்றார்கள். இந்தக் கதைகள் உண்மைகளின் தொகுப்பின் பிரதிபலிப்பு அல்லது மாறாக அவை நாம் உலகை விளக்கி அமைக்கும் சாதனங்களை ஒழுங்குபடுத்துகின்றன (Lawler, 2008). பண்புசார் ஆய்வுகளில் கதைகளும் அவற்றின் உட்பொதிந்துள்ள சமூக-பண்பாட்டு அர்த்தங்களை வெளிப்படுத்துவதில் கதையாடல் பகுப்பாய்வும் முதன்மையானவை.

கதையாடல் பகுப்பாய்வு என்பது பண்புசார் பகுப்பாய்வின் ஒரு வடிவம், இதில் பதிலளிப்பவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவத்தின் ஓட்டத்தை எவ்வாறு ஒழுங்கமைக்கிறார்கள் மற்றும் அவர்கள் பங்கேற்ற நிகழ்வுகள் மற்றும் செயல்களைப் புரிந்துகொள்வதில் ஆய்வாளர் கவனம் செலுத்துகின்றனர் (Schutt, 2019). மேலும் ரைஸ்மன் (Riessman, 2002) கதையாடல் பகுப்பாய்வு தொடர்பாக குறிப்பிடும் போது கணம்-கணம் கவனம் செலுத்துகின்ற உரையாடல் பகுப்பாய்வினைப் போலன்றி, கதையாடல் பகுப்பாய்வானது பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்ளும் அனுபவங்கள் அல்லது நிகழ்வுகளைப் பற்றிய பெரிய தோற்றத்தை ஒன்றாக இணைக்க முயல்கின்றது (மேற்கோள் ibid).

பண்புசார் ஆய்வு முறையியல் பல்வேறுபட்ட தரவுப் பகுப்பாய்வு அணுகுமுறைகள் காணப்படுகின்றபோதும் இவ்வாய்வானது கதையாடல் பகுப்பாய்வினையே (narrative analysis) பிரதான தரவுப் பகுப்பாய்வு அணுகுமுறையாகக் கொண்டுள்ளது. கதையாடல் பகுப்பாய்வு என்பது பகுப்பாய்வுச் சட்டங்களின் ஒரு வகையாகும். இதன் மூலம் ஆய்வாளர் ஆய்வு விடயத்தில் சொல்லப்படும் கதைகளை அல்லது உரையாடல்களை விளக்கமளிக்கின்றார் (Parcell & Benjamin, 2020). கதையாடல் பகுப்பாய்வு என்பது கதைகளில் பொதிந்துள்ள அடிப்படையான கருத்தியல்கள் மற்றும் அவற்றின் வழியாகக் உருவாக்கப்படும் வாழ்வியல் முறைகளை வெளிக்கொண்டு வருதற்கு ஒரு மிகச்சிறந்த தரவுப்பகுப்பாய்வு முறையாகும். மேலும் இதுவொரு செயன்முறையாகும், இதன் வழியாக ஆய்வாளர்கள் தனியன்கள் மற்றும் சமூக உறவுகளின் சிக்கலான தன்மையினைப் புரிந்துகொள்கின்றனர் (Esin *et al.*, 2014 மேற்கோள் Andrews *et al.*, 2004 இலிருந்து).

இவ்வாய்வுக்கான கதை (story) யாழ்ப்பாண மாவட்டத்தில், கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மீள திரும்பியவரிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் வழியாகப் பெறப்பட்டது. இவ்வாய்வு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து அண்மையில் வெளிவந்த நபர் ஒருவரின் கதையினை பிரதானமாகக் கொண்டிருந்தாலும் ஆய்வின் தகுதி, நம்பகத்தன்மை ஆகியவற்றினை உறுத்திப்படுத்தவும், ஆய்வு விடயத்தினை துல்லியமாக வெளிப்படுத்தவும் விடய ஆய்வினை (case study) நோக்கம் கருதிய மாதிரி எடுப்பின் வழியாகப் பதிவுசெய்துள்ளது. விடய அனுபவத்தினை மையப்படுத்திய புரிந்துகொள்ளல் (case-oriented understanding) என்பது பண்புசார் தரவுப் பகுப்பாய்வில் முதன்மையானது. கதையாடல் பகுப்பாய்வின் தனித்துவமான விடயங்களைப் புரிந்துகொள்ள இவை துணைசெய்கின்றன. உண்மையில் விடய அனுபவத்தினை மையப்படுத்திய புரிந்துகொள்ளல் என்பது பங்கேற்பாளருடைய நோக்கில் குறிப்பிட்ட சமூகப் பொருண்மையினை விளங்கிக்கொள்ள முயற்சிக்கின்றது (Schutt 2019). ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட விடய ஆய்வானது தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வந்தவர்களிடம் (விடய ஆய்வு 1 - 3) மட்டுமல்லது ஏனைய நபர்களிடமிருந்தும் (விடய ஆய்வு 4 - 5) பெறப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் பிரதான கதையானது யாழ்ப்பாண நகரத்தில் வசிக்கின்ற லட்சுமி (வயது 45) என்கின்ற இரண்டு பிள்ளைகளின் தாயிடம் இருந்து பதிவுசெய்யப்பட்டது. லட்சுமியின் பிள்ளைகளில் ஒருவர் பல்கலைகழக மாணவன் (22) மற்றவர் தற்போது உயர்தரப் பரீட்சையினை எதிர்நோக்கியிருக்கின்ற மாணவி (20). இவர் தன்னுடைய கொவிட்-19 வைரஸ் தொற்று அனுபவத்தினையும் அதனோடிணைந்த தனிமைப்படுத்தல் அனுபவத்தை குறிப்பிடும் போது

> *என்னுடைய கணவர் (52) யாழ்ப்பாண நகரத்தில் கடையொன்றில் வேல செய்றார். அவருக்கு போன மாதம் உடம்பு ஏலேமல் இருக்கு என்று PHI க்கு சொல்லி PHI வந்து அவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு கூட்டிபோய் செக் பண்ணிப் பார்த்தனர். அப்போது அவருக்கு கொரான தொற்று இருக்கு என்று சொல்லி எங்கட வீட்டின் கதவில் நோட்டிஸ் ஒட்டி வீட்டிலேயே தனிமைப்படுத்திவிட்டார்கள்....*

என்று தொடங்கி பின்னர் அவர்களுக்கு அவருடைய கணவர் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து திரும்பி வந்ததன் பின்னர் கொவிட்-19 தொற்று உள்ளதா? என பரிசோதித்து குறித்த பெண்ணிற்கும் அவருடைய பிள்ளைகள் இருவருக்கும் கொவிட்-19 தொற்று உள்ளது என்று கண்டறியப்பட்டத்தினைத் தொடர்ந்து அவர்கள் மூவரையும் கோப்பாயில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி 10 நாட்கள் அங்கே தனிமைப்படுத்தியுள்ளமையினையும் குறிப்பிட்டார். தகவலாளியினுடைய கதை என்பது அவருடைய கணவருக்கு கொவிட்-19 தொற்று உறுதிசெய்யப்படுவதற்கு முன்னுள்ள காலப்பகுதியிலிருந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பின்னர் வீட்டிற்குத் திரும்பிய காலம்,

திரும்பிய பின்னரான காலப் பகுதி ஆகியவற்றில் அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களை தொகுத்தும் அவற்றின் வழியாக வெளிப்பட்ட, அவர்கள் எதிர்நோக்கிய சமூக-பொருளதார மற்றும் உளவியல் சவால்களை விவரிப்பனவாக உள்ளன.

## ஆய்வு முடிவுகளும் கலந்தாராய்தலும்

கொவிட்-19 வழியான சமூகவியல் தாக்கமானது பன்மைத்துவமானது. இப்பகுதியில் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட விடய கதை மற்றும் விடயக்கலை அனுபவம் ஆகியவற்றினை பண்புசார் தரவுப் பகுப்பாய்வு அணுகுமுறைகளின் வழியாக பொருள் உய்த்துணரப்பட்டு பொருத்தமான கருப்பொருட்களில் விளங்கப்படுத்தப்படுகின்றது. ஆய்வுசார் எண்ணக்கருக்களையும், விடயங்களையும் விளங்கிக்கொள்ள முன்னைய ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டதுடன் ஆய்வு முடிவுகள் தொடர்பான நம்பகத்தன்மை, தகுதிநிலை ஆகியனவும் முன்னைய ஆய்வு முடிவுகளுடன் ஒப்பீட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்தலும் தனிமைப்படுத்தல் நிலையங்களும்

தனிமைப்படுத்தல் என்பது கொவிட்-19 பேரிடருக்கு பிற்பாடு சமூகத்தில் பயன்படுத்தப்படுகின்ற முதன்மையான சொற்பதமாகும். பொதுச் சுகாதாரச் செயன்முறைகளில் தனிமைப்படுத்தல் என்பது ஒரு தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை (சமுதாயத்தினை) பிரிப்பதினைக் குறிக்கின்றது (Parmet *et al*. 2020). உலக வரலாற்றில் தொற்றுநோய்கள் பரவலாகக் காணப்படுகின்றபோது தனிமைப்படுத்தல் என்பது பொதுவான நடைமுறையாகவே இருந்து வந்துள்ளது. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு தென்னாசிய நாடுகளில் வெப்ப காலங்களில் பரவலாக ஏற்படும் அம்மை நோய் (smallpox/chickenpox) என்பது ஒருவகையான தொற்று நோயாகும். இக்காலங்களில் மக்கள் தங்களுடைய வீட்டின் வாயிற்புறத்தில் வேப்பிலை கட்டி தங்களுடைய வீட்டில் அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர் உள்ளார் என்பதனை சமூகத்துக்கு தெரியப்படுத்திவிடுகின்றனர். இதுவும் ஒருவகையான தனிமைப்படுத்தல் வழிமுறையாகும். எனினும் தற்போதை கொவிட்-19 தொற்றுநோய் பரவுகை என்பது தனிமைப்படுத்தலினை நிறுவனமயப்படுத்தியுள்ளது. அண்மைக்காலங்களில் புதிய சட்ட வரையறைக்களுக்கு உட்பட்ட ஒன்றாக தனிமைப்படுத்தல் மாறியுள்ளது.

தனிமைப்படுத்தல் என்ற கருத்துநிலையானது உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய நடைமுறைகள் மற்றும் பண்பாட்டில் தீவிரமாக உட்பொதிந்துள்ளது. குறிப்பாக தொற்று நோய்க் காலங்களில் இவை அதிக ஆர்வமிக்க விடயமாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் தனிமைப்படுத்தல் எனும் இச்சொல் பயம், மனக்கசப்பு, ஏற்றுக்கொள்ளுதல், ஆர்வம் மற்றும் குழப்பம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளை தூண்டுகின்றது (Gensini, 2004). பொதுச் சுகாதார செய்முறைகளில் தனிமைப்படுத்தல் என்ற சொல் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களை (சமுதாயத்தினை) பிரித்துவைத்தலை குறிக்கின்றது (Parmet *et al.,* 2020). அண்மைக்காலங்களில் கொவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள், தொற்றுநோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணியவர்கள், தொற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்காலம் என சந்தேகப்படக் கூடியவர்கள் ஆகியோரை ஆரோக்கியமான தனிமனிதர்களிடமிருந்து குறிப்பிட்ட காலம்வரையாக பிரித்துவைத்தலைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்படுகின்றது

தனிமைப்படுத்தல் பொதுவாகவே இதனை அனுபவித்த மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் தனிமைப்படுத்தல் அவர்களை தாங்கள் நேசித்த மக்களிலிருந்து பிரித்தல், அசைவுகளின் சுதந்திரங்களை இழக்கச்செய்தல், நிச்சயமற்ற தன்மையினை ஏற்படுத்தல் மற்றும் சிலவேளைகளில் மிக அதிகரித்த நோய் நிலைமை மற்றும் சலிப்பினை உணரச்செய்தல் போன்றவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றது (Brooks *et al.,* 2020). எனவே தனிமைப்படுத்தல் வழியான சமூக அனுபவங்கள் தனிமைப்படுத்தலானது எவ்வகையில் சமூக-பொருளாதார-உளப்பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பதனை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக அமைகின்றது. இந்நிலையில் இவ்வாய்வும் கொவிட்-19 தொற்றுக் காரணத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட நபர் ஒருவரின் அனுபவத்தினை அடிப்படையாக்கொண்டு அவர்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார- உளவியல் விடயங்களை வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் 2020 ஆண்டு ஜனவரி மாதத்தில் முதலவாது கொவிட்-19 தொற்றாளர் கண்டறியப்பட்டதினைத் தொடர்ந்து கந்தக்காடு முதலாக கிட்டத்தட்ட 45 தனிமைப்படுத்தல் நிலையங்கள் இலங்கை இராணுவத்தினரால் உருவாக்கப்பட்டது. கொவிட்-19 தொற்றுப் பரவலடைந்தபோது மாவட்ட ரீதியாகவும் இவ் தனிமைப்படுத்தல் நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையங்களில் ஒன்றாகவே கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையம் காணப்படுகின்றது. கோப்பாயில் அமைந்துள்ள தேசிய கல்வியியல் கல்லூரியே தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு வைத்தியர்களுடன் இணைந்த மருத்துவ சேவை வழங்கப்படுவதுடன் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் கண்காணிப்பு இடம்பெறுகின்றது. இந்த நிலையத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைகள் பிரத்தியேமாக அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனது குடுப்பத்தினருக்கு ஏற்பட்ட தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து மீளத்திரும்பிய தகவலாளியின் அனுபவங்களை கதையாடல் பகுப்பாய்விற்கு உட்படுத்தியன் அடிப்படையில் பின்வரும் முதன்மையான விடயங்கள் வெளிப்பட்டன.

## கொவிட்-19 தொடர்பான அச்சம்

உலக பெருந்தொற்று நோயாக அடையாளபடுத்தப்பட்ட கொவிட்-19 மக்களின் அன்றாட சமூக வாழ்வில் ஒரு அச்சத்தினையும் சந்தேகத்தினையும் உருவாக்கியுள்ளது. '*என்னுடைய கணவர் வேலையால வந்தவுடன் குளிச்சிட்டுதான் உள்ள வருவார்*' என தகவலாளி தன்னுடைய கதை விவரிப்பில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. கண்ணுக்கு தெரியாத வைரஸ் ஒரு தனியனுடைய உடலினுள் புகுந்துவிட்டால் அவருக்கு பல்வேறுபட்ட உபாதைகளை ஏற்படுத்தி சில சமயம் மரணத்திற்கே கொண்டு செல்லும் என்பது தொடர்பான அச்சம் கலந்த விழிப்புணர்வு மக்களிடம் பொது ஊடகங்கள் வழியாக் சென்றுள்ளமையினை இது காட்டுகின்றது. தனியனுடைய நாளாந்த செயற்பாடுகளில் கொவிட்-19 பெருந்தொற்று தொடர்பான அச்சம் பல மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. தனியன்களிடம் காணப்படும் கொவிட்-19 தொற்றுநோய் தொடர்பான அச்சமானது ஏனையோர் மீதான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது குறிப்பிட்ட நபர்கள் தொற்றாளியாக இருக்க கூடுமோ? என்ற சந்தேகமும் ஏற்படுகின்றது. இவ்வகையான சந்தேகம் தனிமனித இடைவினைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பொதுவாக வீதியல் போகின்றவர்களை ஏற்றிச் செல்லும் வாகன ஓட்டிகள் தற்போது அவ்வகையான உதவிகளைச் செய்வதற்கு முன்வருவதில்லை.

கொவிட்-19 பெருந்தொற்று தொடர்பான அச்சம் சில சமயங்களில் தனியன்களுக்கிடையிலான தவறான புரிதல்களையும் உருவாக்கியுள்ளது. ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் நபர் (விடய ஆய்வு 5) தன்னுடைய பணியின் பொருட்டு குறிப்பிட்ட நிறுவனத்தில் உள்ள வேறுபட்ட கிளைகளுக்கு செல்லவேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பணியாளருடன் தொடர்பிலிருந்து ஒரு அதிகாரிக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டவுடன் குறிப்பிட்ட பணியாளர் தன்னை முதலில் சுயதனிமைப்படுத்திக் (self-isolation) கொண்டார்; தொடர்ந்து தொற்றை கண்டறியும் பரிசோதனைக்கும் (PCR) தன்னை உட்படுத்திக்கொண்டார். இவ்வாறான சந்தர்பத்தில் குறிப்பிட்ட பணியாளர் தனக்கும் பிற அலுவலகத்தில் பணிபுரிகின்ற ஏனைய பணியாளருக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை தொடர்பாகக் குறிப்பிடும் போது

> *'நான் என்னுடைய வேலையாலே அவர்களின் அலுவலகத்திற்குப் போனேன். ஆனால் அவர்கள் நான் தங்களுடைய அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து சென்றதால் தங்களுக்கு தொற்று ஏற்பட்டு விடுமோ என்று பயப்பட்டு நான் தேவையில்லாமல் தங்களுடைய அலுவலகத்திற்கு வந்தாதக கூறினார்கள். இது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது'*

எனக் குறிப்பிட்டிருந்தார் (விடய ஆய்வு 5). இவ்வாறு கொவிட-19 தொடர்பான அச்சம் தனிமனித – சமூக இடைவினைகளில் ஒரு அச்ச நிலையினை உருவாக்கியிருப்பதுடன் தனிபட்ட சமூக இடைவினைகளிலும் பாதிப்பனை ஏற்படுத்தியுள்ளமை வெளிப்படுகின்றது.

### தனிமைப்படுத்தல் நிலையங்களில் ஆரோக்கிய பராமரிப்பு

தனிமைப்படுத்தல் நிலையம் என்பது நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு வெளி நபர்கள் உட் செல்வதற்க்கு மறுக்கப்பட்ட பகுதியாகும். ஒருவகையில் நோய்தொற்றிற்குரிய அபாய வலயமாகக் கருதப்படுகின்றது. அவை முற்றிலும் மருத்துவ - சுகாதார நிலையிலும், பாதுகாப்பு நிலையிலும் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படுகின்ற பகுதியாகும். இங்கு செல்லும் மக்களுக்கு உணவும், தங்குமிட வசதியும் அரசினால் இலவசமாக செய்துகொடுக்கப்படும். தனிமைப்படுத்தல் நிலையத்தில் வசித்தமை தொடர்பாக தகவலாளி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *'என்னையும் என்ற பிள்ளைகளையும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஏற்றிச் சென்று விட்டார்கள். தனிமைப்படுத்தல் நிலையத்தின் வாசலிலே எங்களுக்கு ஒரு பெட்சீற்றும் பதிவிலக்கமும் தந்தார்கள். இந்நிலையத்தில் ஆண்கள் ஒருபுறம் பெண்கள் இன்னொரு புறமும் இருந்தார்கள். நாங்கள் குடும்பமாகச் சென்றதாலும் எனது மகளுக்கும் மகனுக்கும் இணைய வழி கல்வி கற்றுக் கொண்டிருந்தாலும் நாங்கள் கேட்டு மாடிக் கட்டத்தில் ஒரு அறையைத் தந்தார்கள்.*
>
> *உணவு, தேநீர் அனைத்திற்கும் ஒரு மணி அடிக்கப்படும் அப்போது சென்று வரிசையில் நின்று அவற்றைப் பெற வேண்டும். காலையில் தேநீர், மதியமளவில் தேசிக்காய் தண்ணீர், மாலை தேனீர், பின்னர் மல்லித் தண்ணீர் என்று தந்தார்கள். இவ்வாறே காலை, மதியம், இரவு ஆகியவற்றிற்கான உணவுகள் தரப்பட்டன. நான் இருந்த நாட்களில் பெரும்பாலன நாட்கள் மூன்று வேளைகளும் சோறுதான் தந்தார்கள். அசைவம் சாப்பிடுகின்றவர்களுக்கு கருவாடு, மீன், முட்டை போன்றன தரப்பட்டது. ஆனால் அவற்றின் சுவை எங்களுக்கு பழக்கப்படவில்லை. சிலநாட்களில் யாரும் விஷேட உணவு வழங்குவதற்கு உதவி செய்திருந்தால் அன்று புட்டு, டுடில்ஸ், பாண் கிடைக்கும்.*
>
> *குளிப்பதற்கு நீரும், மலசல கூடவசதிகளும் காணப்பட்டது. ஆனால் அவற்றினை சுத்தமாக வைத்திருத்தல் என்பதில் எங்களுக்கும் பொறுப்பு வேண்டும். முதலில் தனித்த அறையில் குடும்பமாக இருந்த நாங்கள் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு ஆட்கள் வருவது அதிகரித்தவுடன் பிரிய வேண்டி ஏற்பட்டது. இரவுப் பொழுது மிக நீண்டதாகவும், புதிய*

*நபர்களின் அறிமுகம் கிடைத்தாலும் அவர்களுடன் கதைப்பது என்பது மிகவும் கஷ்டமாகவும் இருந்தது. எப்போது மீளவும் எங்கட வீட்டுக் வருவோம் என்றிருந்து..'*

மேற்குறிப்பிட்ட தகவலாளியின் விவரிப்பு மிக நீண்டதாக இருந்தாலும் அவை குறிப்பிட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தின் சூழமைவை மிகவும் சுருக்கமாக வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொருவருக்கும் தத்தமது வீடு சௌகரியமானதாகவே இருக்கும், புது இடம் பரீட்சையமாதல் என்பது சாவல் நிறைந்த ஒன்று. இங்கு காணப்படும் கோயில் அவர்களுக்கு சில ஆறுதல்களைத் தந்தாலும் அவர்களின் கைகளில் உள்ள தொலைபேசிகள் அவர்களை குறிப்பிட்ட சில கணமாவது வெளியுலகுடன் தொடர்பினை ஏற்படுத்திவிடுகின்றது.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவர்கள், இருக்கின்றவர்களிடம் தனிமைப்படுத்தல் நிலையம் தொடர்பாகக் கேட்டால் முதலில் வருவது '*அது மிக கஷ்டம் தான். எவ்வளவு நேரம் சும்மா இருப்பது'* என்ற பதில்களே வருகின்றது. எனினும் தொடர்ந்து குறிப்பிடும் போது அங்கு புதிய நபர்களை சந்தித்தது, அவர்களுடைய அனுபவங்களை கேட்டது என பின்னர் அதனை தங்களுக்குரிய ஒன்றாக மாற்றிய அனுபவங்களும் வெளிப்படும். தனிமைப்படுத்தல் நிலையம் ஒருபுறம் மக்களுக்கு நீண்ட ஓய்வு, சுகநல மற்றும் ஆரோக்கிய மருத்துவக் கவனிப்பினை வழங்கினாலும் மக்களுக்கு வெவ்வேறுபட்ட புதுப்புது அனுபவங்களை வழங்கும் இடமாகவும் காணப்படுகின்றது என்பதனை தனிமைப்படுத்தல் நிலையத்தினை நிறைவுசெய்தவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றது. எனினும் இவ்வகையான தனிமைப்படுத்தல் நிலையங்களின் அனுபவங்களை விட வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களை அவர்களுக்கு கொவிட்-19 தொற்று உறுதிசெய்யப்பட்டோ அல்லது உறுதிசெய்யப்படாத நிலையிலோ அரசு கட்டாயம் தனிமைபடுத்தல் செயன்முறைக்கு உட்படுத்துகின்ற போது கிடைக்கப்பெறும் அனுபவம் வேறுபட்டது.

**மீள் சமூக இணைவில் எதிர்கொள்ளும் சவால்கள்**

தனிமைப்படுத்தல் நிலையத்தில் கொவிட்-19 தொற்று என கண்டறியப்பட்டோ அல்லது சந்தேகப்பட்டோ அனுமதிக்கப்பட்ட நபர்கள் ஆரம்பத்தில் 14 நாட்களுக்கு பின்னரும் தற்போது 10 நாட்களை நிறைவு செய்த பின்னரும் வெளியில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுடை தனிமைப்படுத்தல் காலத்தினை நிறைவுசெய்தவுடன் குறிப்பிட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தினை நிர்வகிக்கும் அதிகாரிகளினாலேயே வாகனத்தில் ஏற்றி அவர்களுடைய வீடுகளுக்கு கொண்டு சென்று விடுகின்றனர். அவர்கள் அனைவரும் தங்களுடைய வீட்டிற்கு வந்த பின்னர் குறிப்பிட்ட சில நாட்கள் (4 – 5 நாட்கள்) வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இக்காலப்பகுதியும் அதற்கு பின்னரான காலப்பகுதியும் மக்களுக்கு மிகப்பெரிய சவாலாகவே உள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மீளவும் தங்களுடைய வீடுகளுக்கு மீளத்திரும்பிய ஒரு குடும்பம் எதிர்நோக்கும் சமூக-பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான சவால்களை லட்சுமியின் பின்வரும் உரையாடல் தொகுப்பு விரிவாகவே விளங்கப்படுத்துகின்றது.

*'நாங்கள் எங்களுடைய 10 நாட்கள் தனிமைப்படுத்தல்களை நிறைவுசெய்தபோது எங்களை அவர்களே எங்களது வீடுகளுக்கு கொண்டுவந்து விட்டார்கள். வீட்ட கொண்டந்து விடுகின்ற நாட் காலையில் 4 மணிக்கே எழும்பி வெளிக்கிட்டு நின்றம். ஆனால் எங்களை 10 மணியளவில் தான் பஸ்சில் ஏற்றினார்கள். அதற்கு முன்னர் பருத்துறையாட்களை ஏற்றிக்கொண்டுபோய் விட்டனர். எனக்கு காலையிலே எழுப்பினதிலிருந்து ஒரே யோசனை. வீட்ட போறம் என்ற சந்தோசம் இருந்தாலும் வீட்டை போய் என்ன செய்யப்போறேன் என்று இன்னொரு யோசனை. G.S. இடம் முதேலே சொன்னபடியால் எங்களுக்கு சமைக்க 5000 ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி தந்தவை. ஆனாலும் ஏனைய செலவுக்கு என்ன செய்யப்போறன் என்றும், நாங்கள் வீட்ட போனா கடைகளுக்கு கோயில்களுக்கு போக மற்றவை எங்களை எப்படிப் பார்ப்பினம் என்றும் யோசனை இருந்தது.*

*நாங்கள வீட்ட வந்து 5 நாளா வெளிலேயே போகல, என்னுடைய கணவர் முதலே வெளியில் வந்ததால அவர்தான் ஏதும் சாமன் வாங்கித் தந்தார். என்ர கணவருடைய கடை முதலாளி கணவருடைய சம்பளத்தை வெட்டாமல் முழுசா தந்ததினால் ஓரளவுக்குப் பரவாயில். ஆனா நல்ல சத்தான சாப்பாடுகள், பழங்கள் வாங்கிச் சாப்பிடதான் முடியாது. என்ர கணவர் கடைக்கு வேலைக்குப் போகேக் மற்றவர்கள் ஒருமாதிரி பார்த்தது என்று சொன்னார். ஆனால் இப்பொ பரவாயில்லையாம். ஆனால் நான் தான் கோயிலுக்கு போகலே, பயமாக இருக்கு. எல்லாருக்கும் தெரியும் எங்கட குடும்பத்திற்கே கொரான வந்தது என்று. அதால மற்றவை ஒருமாதிரிப் பார்ப்பினம். தம்பி கூட ஏதாவது கொண்டுவந்த வாசலில் மாட்டிவிட்டு போன் பண்ணிச் சொல்லுவான். நேற்றுத்தான் என்னுடைய மகன் கடைக்குப் போனவன். இருந்தாலும் ஒரு மாதிரித்தான் இருக்கு.....'*

கொவிட்-19 உலகமே சந்தித்துள்ள மிகப்பெரிய தொற்றுப் பேரிடர். எனினும் ஜப்பானில் உலகளாவிய ஒலிம்பிக் போட்டியினை இப்பேரிடருக்கு மத்தியில் நடாத்தி முடித்திருக்கின்றார்கள். எனினும் இலங்கையில் அண்மைய நிலவரப்படி கொவிட்-19 இன் காரணத்தினால் நிகழும் இறப்புகள் அதிகரித்துச் செல்லுக்கின்றது.

கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதத்தில் (2021) நாளொன்றுக்கு சராசரியாக 75 – 80 வரையாக இறப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து திரும்பியவர்கள் தொடர்பான சமூக அச்சம் என்பது தவிர்க்கப்பட முடியதாக உள்ளது. எனினும் அவர்களுடைய வாழ்வாதாரம், உள ஆரோக்கியம் பற்றிய விடயங்களை முற்று முழுதாக புறக்கணிக்க முடியாது. அரசாங்க பணியாளர்களுக்கு அரசானது விஷேட விடுமுறை திட்டத்தினைக் கொண்டுவந்தாலும் அவர்கள் மீளவும் தங்களுடைய அலுவலகத்தில் பணியாற்றும் போது உள ரீதியான நெருக்கடியினை சந்திக்கின்றனர். பல்கலைக்கழகத்தில் வேலை உதவியாளராக கடமையாற்றும் நபர் ஒருவருடைய அனுபவத்தினை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *'எனக்கு தனிமைப்படுதல் போன கிழமை முடிவடைந்து விட்டது. ஒரு கிழமை கழித்துதான் நான் வேலைக்கு என்னுடைய மேலதிகாரியிடம் கேட்டு திரும்பினான். நான் எனது கடமையின் பொருட்டு ஏனைய அலுவலகங்களுக்குச் செல்லும் போது என்னைக் கண்டவுடன் அவர்கள் பயப்பட்டு மாஸ்கை போடுகின்றனர். சிலர் நேரடியாகவே என்னை கேட்டனர் ஒன்னும் பிரச்சினை இல்லைத் தானே. சிலர் என்னை அனுப்பியவர்களிடம் போன் பண்ணி எனக்கு கொரனா வந்தது என்றும் அவர் இப்படி வரலாமா? என்றும் கேட்டனர். என்னால் இயல்பாக வேலை செய்ய முடியுதில்லை..'*

மேற்குறிப்பிட்ட நபருடைய விடயப் பதிவும் (விடய ஆய்வு 2), லட்சுமியின் அனுபவ உரையாடலும் தனிமைப்படுத்தலின் பின்னரான சமூக-பொருளதார மற்றும் உளவியல் ரீதியான நெருக்கடியினைக் வெளிப்படுத்துகின்றது.

### சமூக-பொருளாதார மற்றும் உளவியல் நெருக்கடிகள்

கொவிட்-19 பெருந்தொற்றும் மற்றும் அதனோடிணைந்த தனிமைப்படுத்தல் ஆகியவற்றின் வழியாக மக்களிடையே ஒரு பதற்றமான மனநிலையும், எதிர்காலம் பற்றிய அச்சமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஐக்கியநாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழச்சித்திட்ட அறிக்கையில் கொவிட்-19 பெருந்தொற்று ஆரோக்கியம் சார்ந்த நெருக்கடிகளுக்கு மேலும் அதிகமாக சமூகங்கள் மற்றும் பொருளாதாரத்தின் மையப்பகுதியை மிகவும் பாதித்துள்ளமையினைச் சுட்டிக்காட்டியுள்ளது (UNDP, 2020).

### பொருளாதார நெருக்கடி

ஒவ்வொரு தனியனுடைய ஆரோக்கியமான சமூக வாழ்விற்கு அவர்களுக்குப் போதுமான வாழ்வாதார வசதிகள் அவசியம். இதனை தீர்மானிப்பதில் அவர்களுக்குரிய வருமானம் மிக முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. கொவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்டு, அதன் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து மீளவும் சமூகத்துடன் ஒன்றினையும் ஒவ்வொரு சாதாரண (middle-lower class) குடும்பத்திற்கும் பொருளாதார நெருக்கடி என்பது தவிர்க்க முடியாது. உழைக்கும் வருமானம் அன்றாட தேவைக்கே போதுமானதாக இல்லாத நிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு இவை மிகப்பெரிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது. ஆய்வு தகலாளியான லட்சுமி தன்னுடைய பொருளாதார நிலைபற்றிக் குறிப்பிடும் போது அவருடைய கணவன் சாதாரண கடை ஊழியர். அவருடைய வருமானம் என்பது மாதாந்தம் 24, 000 ரூபா ஆக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் தங்களுடைய நாளாந்த செலவினையும் பிள்ளைகளின் கல்விச் செலவினையும் எதிர்கொள்ளுதல் என்பது மிகப்பெரிய சவாலான விடயமே. லட்சுமிக்கு அரசாங்கத்தின் உதவிகளான சமுர்த்தி மற்றும் இடர்காலக் கொடுப்பனவுகள் அவர்களுடைய நாளாந்த வாழ்வாதார செலவினை கொவிட்-19 பேரிடர் காலத்தில் மிக எளிமையான நிலையில் கொண்டுசெல்ல உதவியிருந்தாலும் அவர்களுக்கு ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்றும் அதனோடிணைந்த தனிமைப்படுத்தலும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகவே வெளிப்படுகின்றது. இதனையே இலங்கையின் றுகுணு பல்கலைக்கழகத்தின் மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடத்தின் ஆய்வறிக்கை வாழ்வதற்கான அச்சுறுத்தல் (threat to survival) என்று குறிப்பிடுகின்றது (Bohingamuwa, 2020). அவர்களுடைய அறிக்கையில் இலங்கையில் மக்களின் சமூக-பொருளாதார நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விரிவாகக் குறிப்பிட்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலின் விளைவாக குடும்பங்களிடையே வருமான அதிர்ச்சி (Income Shock) ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (Martin *et al.,* 2020). நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவான அத்தயாவசியப் பொருட்களின் விலையேற்றம், பயணத்தடை மற்றும் நாடு முடக்கம் போன்றவற்றினால் ஏற்படும் நுகர்வு செவீனங்களின் அதிகரிப்பு என்பன குடும்பங்களின் மாதாந்த வருமானம் அதிகரிக்காத நிலையில் குடும்பங்களில் பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்துகின்றது. ஆய்வுத் தகவலாளியான லட்சுமியின் வயது வந்த பிள்ளைகள் மற்றும் கணவனுடைய அன்றாட உணவுத் தேவைகளை முழுமையாகப் பூர்த்திசெய்வதற்குரிய வருமான போதாமை என்பது அவர்களுடைய ஏனைய குடும்பப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகின்றமையினை பின்வரும் லட்சுமியின் உணர்வுமிக்க வரிகள் வெளிப்படுத்துகின்றன.

*'என்னுடைய கணவர் சாதாரண தொழிலாளிஞு அவருக்கு மாதம் 23,000 ரூபாதான் கொடுப்பார்கள். அவர் வங்கியில் லோன் எடுத்தவர் அதற்கு மாதம் மாதம் 5000 ரூபா கட்டவேணும். இதற்குள்ள அரிசி, சீனி, மா எல்லாம் விலை ஏறிட்டு, அரசாங்கம் சமுர்த்திக் காசு தாறது இதைக்கொண்டு தான் எங்கட வாழ்கைச் செலவு போனது. ஆனா இந்த நோய் வந்து எனக்கும் என் குடும்பத்திற்கும் பெரிய க்'டத்தை ஏற்படுத்திவிட்டது.'*

கொவிட்-19 பெருந்தொற்றுப் பாதிப்பு மக்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் பெரும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தி அடைந்த நாடுகளே கொவிட்-19 பேரிடர் வழியான பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள இந்நிலையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. அதன் விளைவு சாதாரண குடிமக்கள் மீது மேலும் அழுத்தத்தினைப் பிரயோகிக்கின்றது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த குறிப்பாக நடுத்தர, வருமானம் குறைந்த மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்வியல் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். அரசு தனிமைப்படுத்தல் காலங்களில் நிவாரணம் வழங்கினாலும் அவை அவர்களுக்குப் போதுமானவையாக இல்லை.

### பால்நிலை அடிப்படையிலான பிரச்சினை

பால்நிலைப் பாகுபாடு மற்றும் அவற்றின் அடிப்படையிலான சமூகச் செயற்பாடுகள் முதன்மையான சமூக விவகாரங்களின் இயங்குவிசையாகக் காணப்படுகின்றது. தென்னாசிய நாடுகளின் மரபார்ந்த குடும்ப அமைப்புகளில் இவற்றின் செல்வாக்கு மிக்க தன்மையினை காணலாம். இந்நிலையில் கொவிட்-19 பேரிடர் சூழலில் குடும்பங்களில் பால்நிலை அடிப்படையான முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. பொருளாதார ரீதியான நிரந்தரமற்ற தன்மை குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் மன அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது. கொவிட்-19 காலப்பகுதியில் அரசினால் கொண்டுவரப்பட்ட பயணத் தடைகளும், ஊரடங்கும் இன்னொருவகையில் குடும்ப வன்முறைகளுக்கு அடிப்படையாக இருந்துள்ளன. உலகளாவிய நிலையில் கொவிட்-19 பேரிடர் பால்நிலை ரீதியான வன்முறைகளை அதிகரிக்கச்செய்துள்ளது (UNDP, 2020b).

வேலைக்குச் செல்லாத குடும்ப பெண்ணாக இருக்கும் லட்சுமி வீட்டில் வருமான அற்ற ஒரு பெண்ணாகவே பார்க்கப்படுகின்றாள். இந்நிலையில் அவளுடைய வீட்டினைப் பாரமாரிக்கும் கடமைக்குப் புறப்பாகவும் மன அழுத்தங்கள் அதிகரிக்கின்றது. இந்நிலையில் தனிமைப்படுத்தலும் அதன் பின்னரான காலப்பகுதியும் ஒரு தாய் என்ற ரீதியில் லட்சுமிற்கு பல்வேறு உள நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளமையினை அவருடைய கதைப் பகிர்வு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

### உளவியல் நெருக்கடி

தனிமைப்படுத்தல் சார்ந்த உளவியல் தாக்கங்கள் தொடர்பாக முன்னா் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தனிமைப்படுத்தல் என்பது மக்களிடையே நோய்த்தொற்று சார்ந்த பயம், விரக்தி மற்றும் சலிப்பு போன்ற உளநெருக்கடிகளுக்கு அடிப்பாடையாக உள்ளமையினை அவதானிக்கமுடிகின்றது (Gensini, 2004; Jurblum *et al,* 2020). இவ்வாய்விலும் தனிமைப்படுத்தல் காலம் பற்றிய தகவலாளியின் விவரிப்புக்கள் அவர்களிடையே காணப்பட்ட பதற்றம், நோய்பரவுகை தொடர்பான அச்சம், பாதுகாப்பற்ற உணர்வு, வாழ்வின் மீதான விரக்தி மற்றும் சலிப்பு, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் போன்ற வெவ்வேறுபட்ட உளவியல் நெருக்கீடுகளை வெளிப்படுத்தியுள்ளன. இவையனைத்துக்கும் மேலாக அவர்கள் மீளவும் சமூகத்தில் இணையும் போது அவர்களுக்கு கொவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட களங்கம் பற்றிய சிந்தனைகள் அவர்களுக்கு மிகப்பெரிய உள ஆரோக்கியம் சார்ந்த சவால்களுக்கு அடிப்படையாகக் காணப்படுகின்றது.

கொவிட்-19 பெருந்தொற்று தொடர்பான தகவல்கள் மற்றும் அதுசார்ந்து பிறரால் வழங்கப்படும் ஆலோசனைகள் கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிப்படைந்தவர்களிடையே சிலசமயங்களில் தாழ்வு மனப்பாங்குகளை (law self-esteem) ஏற்படுத்திவிடுகின்றன. எங்களுக்கு தொற்று நோய் வந்துவிட்டது, நாங்கள் சுகாதார நடைமுறையற்று இருந்துவிட்டோம், நாங்கள் தொற்றளார்கள் போன்ற எண்ணற்ற சுய களங்க (Self-stigma) உருவாக்கம் என்பது தொற்றாளர்களிடையே எழுச்சியடைவதினைக் காணலாம். ஆய்வுத் தகவலாளியின் விடய வரலாற்றில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*என்னுடைய கணவருக்கு கொரானா வைரஸ் வந்தவுடன் வீட்டிற்கு முன்கொண்டு வந்து இந்த வீடு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஒட்டிவிட்டார்கள். எங்களுக்கு முதல் இரண்டு மூன்று நாள் வீட்டின் வாசலுக்கும் போகவே வெட்கமாக இருந்தது. வீட்டின் வாசல் கேட் பூட்டப்பட்டே இருந்தது.'*

மேற்குறிப்பிட்ட தகவலாளியின் சமூக அனுபவத்தினை ஒத்த அனுபவத்தினை லோகினிவா மற்றும் அவருடைய நண்பர்கள் தங்களுடைய ஆய்வில் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர் *கொவிட்-19 தனிமைப்படுத்தப்பட்டதன் பின்னர் மக்கள் தங்களுடைய வீட்டிற்கு வெளியே மற்றவர்களுடனான இடைவினையில் இடர்களுக்கும் மற்றும் அவர்களைச் சந்திப்பதில் தயக்கங்களுக்கும் இட்டுச்சென்றுள்ளது* (Lohiniva *et al.*, 2021). சிலசமயங்களில் கொவிட்-19 பெருந்தொற்று தங்களுக்கு ஏற்படாத போதும் அவர்களுடைய நெருங்கிய உறவுகளுக்கு ஏற்பட்டிருந்தால் அவற்றினையும் கூட மக்கள் தங்களுக்குரிய ஒரு

களங்கமாகவே நோக்குகின்றனர் கோண்டாவில் பிரதேசத்தில் வசிக்கின்ற ஒரு வயோதிபத் தாய் ஒருவரின் மகனின் மனைவிக்கு கொவிட்-19 பெருந்தொற்று உறுதி செய்யப்பட்டமையினைத் தொடர்ந்து அவர்கள் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டார். இதனால் குறித்த மகனும் வீட்டிலே தனிமைப்படுத்தப்பட்டார். இந்நிலையில் குறித்த மகனின் வீட்டிற்கு வருகைதராதமை தொடர்பாக அயலவர்கள் விசாரித்த போது அவர்களுக்கு குறித்த தாய் அதனை தெரிவிக்க மறுத்துள்ளமை கொவிட்-19 பெருந்தொற்றின் வழியாக ஏற்படுகின்ற சமூக களங்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவ்விடயம் தொடர்பாக அவர்கள் குறிப்பிடும் போது '*என்ற பிள்ளை வராட்டி இவைக்கென்ன, அவனுக்கு கொரனா என்று நான் எப்படிச் சொல்லுவன்*' (விடய ஆய்வு - 4).

கொவிட்-19 நோய்தொற்றினால் ஏற்படும் சமூக களங்கம் ஒருவர் தனக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டாலும் அதனை மறைக்கவே முற்படும் நிலைக்கு அடிப்படையாகின்றது. இன்று வரை சமூகத்தில் பால்வினை நோயான எச்.ஐ.வி மற்றும் தோல் நோயான தொழுநோய் ஆகிய தொற்று நோய்களே ஒரு பெரிய சமூகக் களங்கத்தின் அடிப்படையாகக் காணப்பட்டது. ஆனால் இன்று கொவிட்-19 தொற்று மிகச் சாதாரணமாக மக்களிடையே சமூக களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றது.

### முடிவுரை

தனிமைப்படுத்தல் அனுபவம் நிச்சயமற்ற தன்மை, ஆரோக்கியம் தொடர்பான அக்கறை மற்றும் சலிப்பு ஆகிய அனுபவங்களை உள்ளடக்கியது (Lohiniva *et al.*, 2021). கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தல் என்பது அவர்களுக்கு தங்களுடைய ஆரோக்கியம் தொடர்பான அச்சத்தினையும் அதனோடிணைந்த சமூக பொருளாதார நிலைசார்ந்த பீதியினை உருவாக்கின்றது. அண்ணளாவாக கொவிட்-19 தொற்று இனங்காணப்பட்டத்தினைத் தொடர்ந்து 14 நாட்கள் தனிமைப்படுத்தல் மக்களுக்கு சலிப்பு உணர்வினை ஒருபுறம் தருவதுடன் பொருளாதார நெருக்கடியினையும் சமூகக் களங்களை உருவாக்கின்றது.

கதையாடல் பகுப்பாய்வு என்பது ஒரு மாறுபட்ட முயற்சி என்றாலும், (சமூக) மொழியில் மற்றும் பிற துறைகளில் (சமூகவியல், உளவியல்) இது குறிப்பிட்ட வகையான தரவு மற்றும் முறைகளைப் பயன்படுத்த முனைகின்றது, இது குறிப்பிட்ட பகுப்பாய்வு சொற்களஞ்சியத்தினை உருவாக்குகின்றது என்ற பாம்பெர்க் மற்றும் ஜோர்ககோபௌலோ (Bamberg and Georgakopoulou, 2008) அவர்களுடைய கருத்திற் அமைவாக யாழ்ப்பாணத்தில் கொவிட்-19 தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு சென்று மீளத் திரும்பிய ஒரு தாயின் கதையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது யாழ்ப்பாணத்தில் கொவிட்-19 பேரிடர்காலத் தொற்றின் வழியாக குடும்பங்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார மற்றும் உளவியல் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்துள்ளது.

நடுத்தர மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்கள் தங்களுடைய அன்றாட வாழ்வியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கே போராடிக்கொண்டிருக்கின்ற போது கொவிட்-19 தொற்று குறிப்பிட்ட குடும்பங்களை மேலும் சமூக-பொருளாதார நிலையில் பின்தள்ளுகின்றது. தனிமைப்படுத்தல் நிலையங்களில் உணவும், தங்குமிட வசதிகளும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்ற போதும் அவர்கள் தங்களுடைய உடல், உள மற்றும் சமூக ரீதியான ஆரோக்கியத்தினை மேம்படுத்திக்கொள்ள அவர்களுடைய வருமானம் போதுமற்றதாக உள்ளமையினை அறியமுடிகின்றது. மேலும் தனிமைப்படுத்தல் காலங்களில் அவர்களுக்கு நீண்ட கால உடல் ஓய்வு வழங்கப்பட்டாலும் அவர்கள் வெவ்வேறுபட்ட உளவியல் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்ற ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளை அங்கரிப்பதாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது.

பொதுக்கொள்கைகள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்களில் பண்பாட்டு விழுமியங்கள், விதிமுறைகள் மற்றும் சமூகங்களில் உள்ள அணுகுமுறைகள் மூலம் பொதுத்துறை உட்பட்ட பல்வேறு நிலைகளில் களங்கம் செயல்படுகிறது. குடும்பம் மற்றும் நண்பர்கள் தொடர்பான தனிப்பட்ட உறவுகளிலும், களங்கத்தை நிர்வகிப்பதற்கான தனிநபர்களின் அறிவு மற்றும் திறன்கள் தொடர்பான தனிப்பட்ட மட்டத்திலும் களங்கம் செயல்படுகின்றது எனும் லோகினிவா மற்றும் ஏனையோர்கள் (Lohiniva *et al.*, 2021) குறிப்பிட்டது போல கொவிட்-19 பெருந்தொற்று தனியன்களிடையேயும் குடும்பங்களுக்கிடையிலும் பல்வேறுபட்ட சமூக நிலைகளில் அதாவது தனிப்பட்ட சமூக – பொது வெளிகளில் களங்களை உருவாக்கியுள்ளது. இவை வேறுபட்ட உளவியல் ரீதியான இடர்களுக்கு அடிப்படையாக அமைகின்றமையினை இவ்வாய்வின் வழியாக அறியமுடிந்துள்ளது.

ஆரோக்கியமான சமூக வாழ்வு என்பதனை கட்டமைத்தல் என்பது அரசினுடைய பொறுப்பாக இருந்தாலும் அங்கு ஒவ்வொரு தனியன்களும் தத்தமது ஆரோக்கியத்தினையும் சமூக ஆரோக்கியத்தினையும் பேணிப்பாதுகாத்து பாராமரிக்கும் கடமை காணப்படுகின்றது. நோய் பேரிடர் காலங்களில் தனியன்களும் சமூகங்களும் பொறுப்புடன் நடந்துகொள்வதுடன் ஏனையோருக்கு உதவி செய்தல் என்பதனை பின்பற்றும் போது ஆரோக்கியமான சமூக ஒன்றை அனைவரும் உருவாக்க முடியும். ஒவ்வொரு தனியனும் கொவிட்-19 தொற்றுப் பரவலினை கட்டுப்படுத்தக் கூடிய வகையில் பொறுப்புடனும் சுகாதார நடைமுறைகளுடனும் வாழும் போது ஆரோக்கியமான சமூகம் என்பது மிக விரைவில் உருவாக்கிட முடியும் என்பதனை இவ்வாய்வு முடிவு பரிந்துரை செய்கின்றது.

## உசாத்துணை நூல்கள்

Bamberg, Michael and Alexandra Georgakopoulou. (2008).Small stories as a new perspective in narrative and identity analysis. *Text & Talk* 28(3), 377–396

Bohingamuwa, Wijerathne (Ed.). (2020). *Covid-19: The Socio-Economic Impact on Sri Lanka Part I & II*, Matara: Faculty of Humanities and Social Sciences, University of Ruhuna.

Brooks, Samantha K., Rebecca K Webster., Louise E Smith., Lisa Woodland., Simon Wessely., Neil Greenberg., & Gideon James Rubin. (2020). The psychological impact of quarantine and how to reduce it: rapid review of the evidence. *Rapid Review*. *365*, 912-920.

Esin, Cigdem., Mastoureh Fathi., & Corinne Squire. (2014). Narrative Analysis: The Constructionist Approach. In Uwe Flick (Ed.) *The Sage Handbook of Qualitative Data Analysis*, pp: 203 -234. London: Sage.

Gensini, Gian Franco., Magdi H. Yacoub., & Andrea A. Conti. (2004). The concept of quarantine in history: from plague to SARS. *Journal of Infection 49*, 257–261.

Jurblum, Marc., Chee H Ng., & David J Castle. (2020). Psychological consequences of social isolation and quarantine: Issues related to COVID-19 restriction. *The Royal Australian College of General Practitioners AJGP*. *49*(12).

Kahandagamage, Anushka. (2021). The 'Masked' Society: Autobiography of Quarantine. Society and Culture in South Asia, 7(1), 181–189.

Lawler, Steph. (2008). Stories and the Social World. Michael Pickering (Ed.). *Research Methods for Cultural Studies*, pp 32 – 49. Edinburgh Edinburgh University Press

Lohiniva A-L., Dub T, Hagberg L., & Nohynek H. (2021) Learning about COVID-19-related stigma, quarantine and isolation experiences in Finland. *PLoS ONE* 16(4), e0247962. Retrieved from https://doi.org/10.1371/journal.pone.0247962

Marotta, Lorena., Andrea Pesce., & Andrea Guazzini. (2020). Before and after the Quarantine: An Approximate Study on the Psychological Impact of COVID-19 on the Italian Population during the Lockdown Period. *Future Internet 12* (229), 1-15.

Martin, Amory., Maryia Markhvida., Stephane Hallegatte., & Brian Walsh. (2020). Socio-Economic Impacts of COVID-19 on Household Consumption and Poverty. *Economics of Disasters and Climate Change*, 4, 453–479.

Ndejjo, Rawlance., Gloria Naggayi., Ronald Tibiita., Richard Mugahi., & Simon P. S. Kibira. (2021). Experiences of persons in COVID-19 institutional quarantine in Uganda: a qualitative study. *BMC Public Health*, 21(482), 1-11.

Parcell, Erin Sahlstein & Benjamin M. A. Baker. (2017). Narrative Analysis. In Allen, Mike (Ed.) *The Sage Encyclopedia of Communication Research Methods* pp: 1069-1072. Thousand Oaks: Sage

Parmet, Wendy E., & Michael S. Sinha. (2020). Covid-19 — The Law and Limits of Quarantine. *The New England Journal of Medicine* 1-3.

Poudel, Kritika., & Pramod Subedi. (2020). Impact of COVID-19 pandemic on socioeconomic and mental health aspects in Nepal. *International Journal of Social Psychiatry*, *66*(8), 748–755.

Rehman, Muhammad Fayyaz ur., Chaudhary Fariha., Aqsa Anwar., Naveed Shahzad., Munir Ahmad., Salma Mukhtar., & Muhammad Farhan Ul Haque. (2021). Novel coronavirus disease (COVID-19) pandemic: A recent mini review. *Computational and Structural Biotechnology Journal* 19: 612–623

Schutt, Russell K. (2019). *Investigating the Social World: The Process and Practice of Research* (9th Edition). Thousand Oaks: Sage.

Silva, Kalinga Tudor (2020). Stigma and Moral Panic about COVID-19 in Sri Lanka. *Journal of Humanities and Social Sciences* 03(02), 42-71.

Toran, Mehmet., Ramazan Sak., Yuwei Xu., İkbal Tuba Şahin-Sak., & Yun Yu. (2021).Parents and children during the COVID-19 quarantine process: Experiences from Turkey and China. *Journal of Early Childhood Research*. 19(1), 21–39

UNDP. (2020). Socio-economic impact of COVID-19.Retrieved from https://www.undp.org/content/undp/en/home/coronavirus/socio-economicimpact-of-COVID-19.html

Williams SN, Armitage CJ, Tampe T. (2020). Public perceptions and experiences of social distancing and social isolation during the COVID-19 pandemic: a UK-based focus group study. *BMJ Open* Retrieved from doi:10.1136/bmjopen-2020-039334s

## நூலாசிரியரின் தகவல்

1) அடையாளம் – பதிவுசெய்யப்பட்டது

2) ஆசிரியரின் சுருக்கமான அறிமுகம்

கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன், மானிடவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கைப் பண்பாடு மற்றும் சமூகம் பற்றிய ஆய்வில் ஆர்வமாக உள்ளார். அவர் இலங்கை தமிழர்கள் பற்றிய மானிடவியல் ஆய்வுத் துறையின் ஆய்வுப் பண்பாட்டு வளர்ச்சிக்கு புகழ்பெற்ற சர்வதேச மற்றும் தேசிய இதழ்களில் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் பங்களித்து வருகிறார்.

3) ஆசிரியரின் பெயர் (இது ஆசிரியரின் பெயராக வெளியிடப்படும்) மற்றும் இணைப்பு
கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன்
மானிடவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூகவியல் துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

4) நன்றியறிதல்

இவ்வாய்விற்காக தகவல்களை வழங்கிய தகவலாளிகள் அனைவருக்கும் நான் நன்றியுடையவனாக இருப்பேன்.
கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து திரும்பியவர்கள்
விடய வரலாறு 1: லட்சுமி, பெண், 46, வீட்டுபெண், யாழ்ப்பாணம்
விடய ஆய்வு 1: மன்னன், ஆண் 60, பலசரக்குகடை முதலாளி, கொக்குவில்
விடய ஆய்வு 2: சுகந்தி, பெண் 36, வீட்டுப் பெண், கோண்டாவில்
விடய ஆய்வு 3: போல், ஆண் 26, பல்கலைக்கழக ஊழியர், குருநகர்
கொவிட் - 19 பாதிப்பிற்குட்படாதவர்கள்
விடய ஆய்வு 4: தங்கரத்தின் பெண் 72, வீட்டுபெண், கோண்டாவில்
விடய ஆய்வு 5: நாதன், ஆண் 54, பல்கலைக்கழக ஊழியர், கொக்குவில்

## ORCID

ச.சிறிகாந்தன் https://orcid.org/0000-0001-6817-1162